# இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே தீர்வையல்லாத(பிற) தடைகளை விதித்தல்

“இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)’’ என்ற தலைப்பிலான Verité Research இன் முன்னைய கட்டுரையானது, வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும்போது, தீர்வையல்லாத தடைகள் (NTB) ஏற்றுமதிகளுக்கு ஒரு பலமான தடையாக அமையக்கூடும் என்பதனால் “தீர்வையற்ற சலுகை” (duty free access) என்பதில் மாத்திரம் கவனம் செலுத்துவது போதாது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருந்தது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியானது எதிர்பார்த்த அளவு விரிவடையாதுள்ளமையை அக்கட்டுரை எடுத்துக்காட்டியது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் உறுதியான தீர்வைச் சலுகைகள் இருந்தும் இந்த நிலைமை நிலவியது. ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கிய வரி அல்லாத தடைகள், வரிச் சலுகைகளை வென்று வீழ்த்தின.

பதனிடப்பட்ட உணவு வகைகளை ஏற்றுமதி செய்வோர் எதிர்நோக்கும் கணிசமான தீர்வையல்லாத தடைகளுக்கான ஒரு தீர்வினை இக்கட்டுரை வழங்குகிறது: அதாவது, இந்தியத் துறைமுகங்களில் ஏற்படும் அனாவசியத் தாமதங்கள் மற்றும் இந்திய நியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாகவிருத்தலை நிரூபிப்பதற்காக ஏற்படும் செலவுகள் ஆகிய வரி அல்லாத தடைகளுக்கான ஒரு தீர்வினை இக்கட்டுரை வழங்குகிறது. ஒரு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தம் (MRA) இப்பிரச்சினைகளுள் பெரும்பாலானவற்றைத் தீர்த்து வைக்கும் என்பதோடு, அத்தகையதோர் ஒப்பந்தத்திற்கான தேவையை இந்தியா அங்கீகரிப்பதில் எவ்வித தடையும் இல்லை.

## தற்போதைய பிரச்சினை

நியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக உள்ளதா என்பதை பரீட்சிப்பது இசைவு மதிப்பீட்டு நடைமுறை (CAP) என்று அழைக்கப்படுகிறது. பாவனையாளர்களின் உடல் நலத்தையும் பாதுகாப்பையும் அத்துடன் சுற்றாடலையும் பாதுகாப்பதே இசைவு மதிப்பீட்டு நடைமுறையின் நோக்கமாகும். இந்தியாவிற்கான பதனிடப்பட்ட உணவுப் பொருள் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில், உயர்ந்த மட்டத்திலான மாதிரியிடல், களஞ்சிப்படுத்தல் செலவுகள் மற்றும் பரிசோதனை நடைமுறைகளை வெற்றிகரமாகக் கடப்பதற்கு எடுக்கும் நீண்டகாலம் மற்றும் அதிலுள்ள நிச்சயமற்ற தன்மை ஆகியன காரணமாக CAP கள் வர்த்தகத்திற்கு ஒரு தடையாக மாறியுள்ளன.

## தோல்வியுற்ற தீர்வுகள்

CAP கள் அனாவசியமாக வர்த்தகத்தை மட்டுப்படுத்துவதைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தங்களை இந்தியாவும் இலங்கையும் ஏற்கனவே செய்துகொண்டுள்ளன. ஒன்றுக்கொன்று இசைவான நியமங்களுடன் கூடிய உற்பத்திப் பொருட்களின் இசைவுத் தன்மையை அங்கீகரித்து, 2006 ஆம் ஆண்டு இலங்கைத் தரக்கட்டுபாட்டு நிறுவகத்துக்கும் (SLSI) இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவகத்துக்கும் (BIS) இடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இசைவான தரநியமம் இன்மையினால் இந்த ஒப்பந்தம் பொருத்தமற்றதாகவே உள்ளது.

SLSI இற்கும் ஏற்றுமதிப் பரிசோதனைப் பேரவைக்கும் (EIC) இடையில் 2002 இல் செய்துகொள்ளப்பட்ட இன்னுமொரு ஒப்பந்தம், ஒரு சில இந்திய உற்பத்திப்பொருட்கள் இலங்கை நியமங்களுக்குரிய இசைவுச் சான்றிதழைக் கொண்டிருப்பின் இலங்கையில் மேலும் சோதனைகள் நடத்தாமலே அவற்றை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்திய ஏற்றுமதியாளர்களை அனுமதித்தது. எனினும், இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கு மாத்திரமே நன்மையளிப்பதனால், அது ஒருதலைபட்சமானதாக அமைந்துள்ளது.

## தற்போதுள்ள தீர்வு

தற்போதுள்ள ஒருதலைப்பட்சமான ஒப்பந்தம் பரஸ்பரம் நன்மையளிப்பதாக மாற்றப்பட்டால், அது MRA என்று அறியப்படும் ஒரு ஒப்பந்தமாக மாற்றமுறும். இது இசைவுபடுத்துதலை விட எளிதானதாகும். ஏனெனில், ஒவ்வொரு நாடும் தமது சொந்த நியமங்களை/ ஒழுங்குவிதிகளைத் தொடர்ந்து பேண முடிவதோடு, ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அத்தகைய சான்றிதழ் வழங்க அதிகாரம்பெற்ற மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட அந்நாட்டு நிறுவனங்களினால் வழங்கப்படும் அந்நாடுகளின் நியமங்களுக்கான/ ஒழுங்குவிதிக்கான இசைவுச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கவும் முடியும் (காட்சி 1 ஐ பார்க்கவும்).

## CEPA விற்காக காத்திருக்க வேண்டாம்


MRA என்பது ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான உத்தேச விரிவான பொருளாதார பங்காண்மை ஒப்பந்தத்தின் (CEPA) ஓர் அங்கமாக உள்ளதால் இவ்விரு நாடுகளுக்கும் எற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வாகக இது அமைந்துள்ளது.

MRA ஆனது CEPA அமுல்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டுமா அல்லது அது முதலில் தனியாக அமுல்படுத்தப்பட வேண்டுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

ISFTA வினுள் NTB களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகள் இல்லாமையும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பிரச்சினை தீர்த்தல் நடவடிக்கைகளின் பலவீனமும் இந்தியாவுடனான வர்த்தகத்தை மேலும் தாராளமயப்படுத்துதால் ஏற்படும் நன்மைகள் பற்றிய இலங்கை ஏற்றுமதியாளர்களின் நம்பிக்கையை மங்கச் செய்துள்ளன. எனவே, MRA இனை CEPA இல் இருந்து பிறித்தெடுத்து அதனை முதலில் நடைமுறைப்படுத்துவதானது, தற்போதுள்ள வர்த்தக ஒப்பந்தத்தின் பயன்கள் பற்றிய ஒரு தெளிவான பார்வையை வழங்க உதவும்.

அத்துடன், அதனால் விளையக்கூடிய நன்மைகள் தெளிவாகினால், எதிர்காலத்தில் வர்த்தக ஒப்பந்தத்தைக் கூடியளவு பரஸ்பர நன்மைகள் கொண்டதாக விரிவுபடுத்துவதற்கான சிறந்த பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறை ஒன்றையும் அது ஏற்படுத்தக்கூடும்.

.




*காட்சி 1: இசைவு மதிப்பீடு தொடர்பான MRA*

வெறீட் ரிசேர்ச் பொருளியல், சட்டம், அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உயர் மட்ட தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு மூலோபாய பகுப்பாய்வுகளை வழங்கும் கொழும்பைத் தளமாகக்கொண்ட சுயாதீனமான ஒரு சிந்தனைக் குழாமாகும். உங்கள் கருத்துரைகள் வரவேற்கப்படகின்றன. மின்னஞ்சல் publications@veriteresearch.org